ஆட்குறைப்பு சம்பந்தமாக பேச்சு வார்த்தை கோவை, தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு நடைபெறவிருக்கிறது.

லே-ஆப் சம்பந்தமாக 24—10—75 அன்று என் முன்பு பேச்சு வார்த்தை நடைபெற்றது. அதன் பின்னர் இரு தரப்பினரையும் நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்துமாறு நான் ஆலோசனை கூறினேன். மீண்டும் 15—11—75 அன்று என் முன்பு லே-ஆப் பற்றி பேச்சு வார்த்தை தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுவதால் இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

(3) கவன ஈர்ப்பு

நெல்லிக்குப்பம் பாரீஸ் கன்பெக்ஷனரி மூடப்பட்டதும், தொழிலாளர் வேலை இழப்பும்.

THIRU V. KRISHNAMOORTHY: Sir, under Rule 41 of the Assembly Rules, I call the attention of the Hon. Minister for Labour and Transport to a matter of urgent public importance, i.e., the closure of the Parry Confectionery at Nellikuppam for the past several months by the management and the loss of work for about 1,500 workers.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நெல்லிக்குப்பம் பாரீஸ் கன்பெக்ஷனரி லிமிடெட் தொழிற்சாலையில் சுமார் 600 தொழிலாளர்கள் வேலை பார்த்து வந்தனர். இத்தொழிற்சாலையில் மிட்டாய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. வியாபார மந்த நிலையால் உற்பத்தியான பொருள்கள் விற்பனையாகாத காரணத்தைக் கூறி நிர்வாகத்தினர் 11—6—75 முதல் தொழிலாளர்களை வேலை வாய்ப்பில்லை என்று லே-ஆப் செய்தனர். அந்த நிலை நீடித்ததால் தொழிற்சாலையில் உற்பத்தி அளவையும், உற்பத்திச் செலவையும் குறைக்க அவசியம் ஏற்பட்டதென்ற காரணத்தைக் கூறி நிர்வாகத்தினர் 201 தொழிலாளர்களை 1975-ம் ஆண்டு ஜூலை 7 முதல் ஆட்குறைப்புச் செய்துள்ளதாக அறிவிப்புக்

கொடுத்தனர். இந்த ஆட்குறைப்பின் காரணமாக நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்குமிடையே தகராறு ஏற்பட்டு ஆட்குறைப்பை ஆட்சேபனை செய்யும் வகையில் மற்ற தொழிலாளர்கள் நிர்வாகத்தினரால் வேலைக்கு அழைக்கப்பட்டபோதிலும் 26—7—75 முதல் வேலைக்குச் செல்லவில்லை.

இத்தொழிற் தகராறு சம்பந்தமாக தொழிலாளர் துறை உதவி ஆணையர் முன்பு சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. இதற்கிடையில் தொழிலாளர்களுக்கு அனுமட்டும் கொடுக்கப்பட்டு வந்த சம்பளம் நிர்வாகத்தின் பொருளாதார சக்திக்கு அப்பாற்பட்டு இருப்பதாகவும், அந்தச் சம்பள விகிதங்களை தொடர்ந்து கொடுப்பதற்கு நிர்வாகத்தினரால் இயலாதென்றும், இதர மிட்டாய் உற்பத்தியாளர்களுடன் போட்டியிடும் நிலைக்கு நிறுவனத்தைக் கொண்டு வந்தால்தான் தொழிலைத் தொடர்ந்து நடத்த முடியும் என்றும் கூறி சம்பள விகிதங்களை குறைக்கும் வகையில் நிர்வாகத்தினர் 13—8—1975 அன்று அறிவிப்புக் கொடுத்துள்ளனர்.

இத்தொழில் தகராறு சம்பந்தமாக தொழிலாளர் துறை ஆணையர் முன்பு 21-8-1975 அன்று பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து 8-9-1975, 16-9-1975, 27-10-1975 ஆகிய தேதிகளில் என் முன்னிலையிலும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. ஆட்குறைப்புச் செய்யப்பட்ட தொழிலாளர்களை திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், நடைமுறையில் இருந்து வரும் சம்பள விகிதத்திற்கு குறைவு ஏற்படக்கூடாதென்றும் எழுப்பப்பட்டுள்ள பிரச்னைகளில் இன்னும் சுமுகமான உடன்பாடு ஏற்படவில்லை. மீண்டும் இரு தரப்பினரையும் கூப்பிட்டுப் பேசலாம் என நினைத்திருக்கிறேன். விரைவில் இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முடிவு ஏற்படும் என நம்புகிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: சார், இந்த பாரீஸ் கன்பெக்ஷனரி தான் இந்தியாவிலேயே முதன்முதலாக வெள்ளைக்காரர்கள் ஆண்ட சமயத்திலிருந்து இருக்கக்கூடிய கன்பெக்ஷனரியாகும். அங்கே நிரந்தர தொழிலாளர்கள் ஏறக்குறைய 800 பேரும், காஷுவல் தொழிலாளர்கள் 700 பேரும், ஆக 1,500 பேர்கள் தொடர்ந்து இது வரையில் வேலை செய்து வந்தார்கள். பாரி குரூப் பொதுவாக 2

அல்லது 2½ கோடி ரூபாய் லாபம் வருவதாக பாலன்ஸ் ஷீட்டில் காட்டியிருக்கிறார்கள். ஆனால் கன்பெக்ஷனரியைப் பொருத்த வரையில் 2, 3 ஆண்டுகளாக மானேஜ்மெண்டுக்கும் அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்கும் சரியான ரிலேஷன்ஷிப் இல்லாததால், பழி வாங்கும் எண்ணத்தோடு, நஷ்டம் வருகிறது என்று கணக்குக் காட்டி, அதை வைத்து விரும்பத் தகாத நிலையால் ஆட்குறைப்பு என்று சொல்லி, மறைமுகமாக ஆட்குறைப்புச் செய்வது, அப்படிச் செய்தால் ஸ்டிரைக் செய்வார்கள், அதன் காரணமாக சம்பளம் கொடுக்கக் கூடாத நிலை ஏற்படும் என்று மானேஜ்மெண்டே இதைச் செய்திருக்கிறார்கள். இது ஏற்பட்டு 5, 6 மாதங்கள் ஆகின்றன. ஒரு நாளைக்கு ஒரு தொழிலாளிக்கு சம்பளம் கிடைக்கவில்லை என்றால், அவன் வீட்டில் எதுவும் நடக்காது. 5, 6 மாதங்களாக கன்பெக்ஷனரி மூடி இருக்கிறது. தொழிலாளர்களுக்கு அரசாங்கம் என்ன நிவாரணம் தேடித் தந்தது? உடனடியாக லேபர் கமிஷனரைக் கொண்டு செட்டில் செய்ய ஏன் முயற்சி செய்யவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தொழிலாளர் தரப்பிலும், நிர்வாகத் தரப்பிலும் ஓர் உடன்பாடு ஏற்பட முடியவில்லை. என்னுடைய அறிக்கையில் நானே மூன்று முறைகள் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதைக் குறிப்பிட்டிருக்கிறேன். நான்காவது முறை பேச்சுவார்த்தை நடத்தும் சூழ்நிலை இருக்கிறது. சீரான நிலை இல்லாததால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல, இந்தத் தொழிற்சாலை வெள்ளைக்காரன் காலத்தில் உருவாக்கப்பட்ட பழைய இயந்திரங்களைக் கொண்டது. அதையும் பழுது பார்க்க வேண்டிய நிலைமையில் நிர்வாகம் இருக்கிறது.

(4) தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

திரு. தொ. ப. சீனிவாசன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1974-75 ஆம் ஆண்டுக்கான மின்சார வாரியத்தின் துணை மான்யக் கோரிக்கையை வரவேற்று என் உரையைத் துவக்க விரும்புகிறேன்.